கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

வாக்குமூல படிவம்

**E.A.No.4/2025 in E.P.No.28/2016**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. ராஜசேகர் | ம.சா | : 2 |
| த/பெயர் | : சுந்தரவடிவேல் | தேதி | : 12.08.2026 |

ம.சாட்சி 2–ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.கோ.ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:–**

1. நான் சாட்சியமளிப்பதற்கு என்னை யார் அழைத்தார்கள் என்றால், சுப்பிரமணி அழைத்தார். சுப்பிரமணி எதற்கு சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால், அவர்கள் தான் தாவாசொத்தில் அதிக வருடங்களாக வசித்து வருவதாகவும், பிரச்சனை ஏற்பட்டுள்ளதாகவும் அது குறித்து சாட்சியம் அளிப்பதற்காக அழைத்தார். வழக்கானது சுப்பிரமணி பெயரில் உள்ளதா? என்றால், அவருடைய மனைவியின் பெயரில் உள்ளது. சுப்பிரமணியத்தின் மனைவி வழக்கு குறித்து என்னிடம் எதுவும் கூறவில்லையா? என்றால், என்னிடம் எதுவும் கூறவில்லை. வழக்கு குறித்த விபரங்கள் அனைத்தையும் நான் தெரிந்து கொண்டேனா? என்றால், தெரிந்து கொண்டேன். என்ன வழக்கு என்றால், விபத்து வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

2. சுப்பிரமணியத்தின் மனைவியின் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். ஆனால் யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. சுப்பிரமணியத்தின் மனைவியின் பெயர் என்னவென்றால், அது எனக்கு தெரியாது. சுப்ரமணியத்தின் மனைவியின் பெயரில் வீடுகள் இருப்பதாக என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதற்குரிய ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா? என்றால், பார்த்ததில்லை. மேற்படி வீடுகளுக்குரிய எவ்விதமான ரசீதுகளையும் நான் பார்த்ததில்லை என்றால், சரிதான். நான் சாட்சியம் அளிப்பது போன்று சுப்பிரமணியத்தின் மனைவி மனு சொத்திலேயே வசிக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக சுப்பிரமணியத்தின் மனைவி மனுசொத்தில் வசிப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

3. உண்மையில் வழக்கு குறித்த விபரங்கள் எனக்கு தெரியுமேயானால் சுப்பிரமணத்தின் மனைவி பெயர் தெரிந்திருக்கும் என்றாலும், நான் சுப்பிரமணி மற்றும்

இரண்டாம் எதிர்மனுதாரர் திருமூர்த்தி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு வழக்கு மற்றும் ஆவணங்கள் குறித்த விபரம் எதுவும் தெரியாது என்றாலும், மேற்படி இரு நபர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை**:– இல்லை

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2026.08.12 05:27:27 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.